பாலப் பணிகளை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

63—

சிறு தொழில் மையம்

***43775—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சி, உலகம்மாள்புரத்தில் சிறு தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சி, உலகம்மாள்புரத்தில் சிறு தொழில் மையம் அமைப்பதற்குத் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், அங்கு சிறு தொழில் மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி சிட்கோ மூலமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா சிறப்புப்

பொருளாதார மண்டலமாகக் கருதப்பட்ட அந்த இடம் வேலைவாய்ப்பு இல்லாமல், காலியாக இருந்துகொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னாலே தொலைக்காட்சியிலே, அந்தத் தொழில்நுட்பப் பூங்காவிலே தொழில் செய்வதற்காக வெளி நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்தியத் தமிழர்கள் 10,000 கோடி ரூபாயை முதலீடு செய்ய இருப்பதாக நான் டி.வி.யிலே பார்த்தேன். அதற்கு முயற்சியெடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் வழிகாட்டுதலின்படி ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தோட்டாக்குடி ஊராட்சியில், உலகம்மாள்புரம், தோட்டாக்குடி, தோப்பூர், பாக்கியநாதபுரம், பத்திரிப்பாறை ஆகிய ஊர்களும் மற்றும் ஆ.சாத்தான்குளம் ஊராட்சி, ஆழ்வார்திருநகரி ஊராட்சி, பருத்திப்பாடு ஊராட்சி, பூலம் ஆகிய ஊராட்சிகளில் 30,000/-க்கும் மேல் மக்கள் வசிக்கிறார்கள். இப்பகுதி மக்கள் கூலித் தொழிலாளர்கள். இப்பகுதிகளிலே வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, பெரும்பாலான மக்கள் அருகிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று, அங்கேயே தங்கி கூலி வேலை செய்கிறார்கள். இதனால் குழந்தைகளைச் சரிவரப் படிக்க வைக்கமுடியாத ஒரு சூழ்நிலை. மேலும் படித்த இளைஞர்கள் விரும்பிய தொழிலைச் செய்ய முடியவில்லை.

நாங்குநேரி தொகுதி, தோட்டாக்குடி ஊராட்சியில் சிறு தொழில் மையம் அமைத்தால் வேலைவாய்ப்பு பெருகும். கூலித் தொழிலாளர்களின் கல்வி மற்றும் பொருளாதாரம் உயரும்; தொழில் வளர்ச்சி ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே இடம் கிடைக்கின்ற வாய்ப்பைப் பொறுத்து தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்கள். அவர்களுக்கு, சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. சரத்குமார் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

2015 *மார்ச்* 27]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரம் இளைஞர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிற இந்தக் காலகட்டத்திலே, என்னுடைய மாவட்டத்திலுள்ள குளச்சலில், சிறு தொழில் வளர்வதற்கு வசதியாக சிறு தொழில் மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் குழுமம் அமைப்பது குறித்து குறிப்பிட்டார்கள். அங்கே தனியார் யாராவது முன்வருவார்களேயானால், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து அந்தக் குழுமம் அமைப்பதற்கு, தக்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முற்பகல் 10-20

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் பேரூராட்சிக்கு நிகரான ஊராட்சி நாச்சியார்கோவில் ஊராட்சி. அந்த ஊராட்சியில் குத்துவிளக்கு உற்பத்தி செய்யும் தொழில் பிரதானமாக உள்ளது. இத்தொழில் சிறுதொழிலாகவும், பெருந்தொழிலாகவும், வியாபார ரீதியாக விளங்குகிறது. இங்கு தயாரிக்கப்படும் குத்துவிளக்குகள் உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே குத்துவிளக்குகள் அதிகம் உற்பத்தியாகின்ற ஊரும் நாச்சியார்கோவில்தான். ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்ற அந்த நாச்சியார்கோவிலில், குத்துவிளக்கு உற்பத்தித் தொழில் நசிந்து போகாமல் பாதுகாக்க, குத்துவிளக்கு உற்பத்தித் தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான நாச்சியார்கோவில் ஊராட்சியில் குத்துவிளக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஏற்கெனவே அந்தப் பகுதியிலே நடைபெறக்கூடிய குத்துவிளக்கு தயாரிக்கும் தொழிலுக்கு 'பூம்புகார்' மூலமாக பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு, அந்தத் தொழிலை மேம்பாடு அடையச் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், தொழிற்பேட்டை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார். 20 பேர் அங்கே தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நல்லரசு, தக்க நடவடிக்கைகள் எடுத்து, நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

64—

சொந்தக் கட்டடம்

***55251—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,